ரூ. 1,39,571-க்கு மேற்படாத கூடுதல் தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(5) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.